# செலவு இல்லை... வரவு மட்டுமே...

## 10.7.12



வானம் பார்த்த மானாவாரி பூமிகளைப் பொறுத்தவரை விதைக்கம் பட்டம்... ஆடிப்பட்டம் மட்டுமே. ஏனெனில், அதுதான் (ஜீன் – செப்டம்பர்) குறிப்பிடத்தக்க அளவில் மழை கிடைக்கும் காலம். இந்த மழைநீரைப் பயன்படுத்தி செய்யப்படும் சாகுபடிகளில் சிறப்பான மகசூல் தருவது.. சிறுதானியங்கள் என்று பொதுவாக அழைக்கப்படும், கம்பு, சோளம், கேழ்வரகு, சாமை, தினை, குதிரைவாலி, வரகு போன்ற தானியங்களே.

இதை நிரூபிக்கும் வகையில் ஆண்டுதோறும் தொடர்ந்து, சிறுதானிய சாகுபடியில் ஈடுபட்டு வருகிறார், புதுச்சேரி யூனியன் பிரதேசத்திலுள்ள பி.எஸ்.பாளையம் (புராணசிங்குப் பாளையம்) பகுதியைச் சேர்ந்த இயற்கை விவசாயி ரவிச்சந்திரன்.

எனக்குச் சொந்தமாக 25 ஏக்கர் நிலமிருக்கு. அதில், ஏறத்தாழ 10 ஏக்கர் நிலத்தில் கம்பு, சாமை, தினை, வரகு, குதிரைவாலி என்று சிறுதானியங்களைத் தான் சாகுபடி செய்கிறேன். ஓரளவிற்கு தண்ணீர் வசதி இருந்தாலும், ஆள் பற்றாக்குறை, மின்சாரத் தட்டுப்பாடுகளைச் சமாளிப்பதற்காக எப்பவுமே ஆடிப் பட்டத்தில் சிறுதானியங்களை சாகுபடி செய்திடுவேன். சிறுதானியங்களுக்குப் பெரிதாக கவனிப்பு தேவையிருக்காது. சாகுபடிச் செலவு போக, ஒரு ஏக்கருக்கு 10 ஆயிரம் ரூபாயிலிருந்து, 15 ஆயிரம் ரூபாய்க்குக்

குறையாமல் வருமானமும் கிடைத்துவிடும். அதற்காகவேதான் விடாமல், சிறுதானியங்களை சாகுபடி செய்துகிட்டிருக்கிறேன்.

**ஏக்கருக்கு 4 கிலோ விதை!**

தினை மற்றும் கம்பு இரண்டுமே 90 நாள் வயதுப் பயிர்கள். வரகு, குதிரை வாலி மற்றும் சாமை ஆகிய பயிர்கள் 100 முதல் 110 நாட்கள் வயது கொண்டவை. ஆனால், அனைத்துப் பயிர்களுக்கும் சாகுபடி முறை ஒன்றுதான்.
ஆனி மாதத்தில் (ஜீன் மாதம்).. முதல் மழை பெய்தவுடன், நிலத்தில் களைகள் இல்லாத அளவிற்கு, இரண்டு சால் குறுக்கு – நெடுக்காக உழவு செய்ய வேண்டும். பிறகு, தேவையான சிறுதானியத்தில், 4 கிலோ தரமான விதையை 2 லிட்டர் பீஜாமிர்தத்தில் முக்கி எடுத்து, நிழலில் உலர்த்தி விதைநேர்த்தி செய்ய வேண்டும். பிறகு, விதையை 5 கிலோ மணலுடன் கலந்து விதைத்து, கொக்கிக் கலப்பை மூலம் ஒரு உழவு செய்ய வேண்டும்.

**பூச்சி, நோய்களுக்கு இடமில்லை!**

சாகுபடி செய்யும் காலம்.. மழைக் காலம் என்பதால், மண்ணில் இருக்கும் ஈரப்பதத்திலேயே முளைப்பு எடுத்து விடும். கம்பு... 3 முதல் 5 நாட்களிலும், தினை.. 7 நாட்களிலும், சாமை, வரகு, குதிரைவாலி ஆகியவை 7 முதல் 10 நாட்களிலும் முளைப்பு எடுத்து விடும்.
அவ்வப்போது கிடைக்கும் மழையிலேயே வளர்ந்துவிடும். பாசன வசதி இருந்தால், 20 நாட்களுக்க ஒரு முறை தண்ணீர் கட்டலாம். கூடவே, மாதம் ஒரு முறை வீதம் இரண்டு முறை மட்டும் ஜீவாமிர்க் கரைசலை பாசனத் தண்ணீரோடு கலந்து விடலாம். பாசனம் செய்யாவிடில், மாதம் ஒரு முறை 1:10 என்ற விகிதத்தில் ஜீவாமிர்தத்தைத் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம்.
20 முதல் 25-ம் நாட்களுக்குள் ஒரு முறை மட்டும் களை எடுத்து, அதிகமாக இருக்கும் பயிர்களைக் களைத்துவிட வேண்டும். அதற்கு மேல் பயிர் வளர்ந்து மூடிக்கொள்வதால் களை எடுக்க வேண்டியிருக்காது. பூச்சி, நோய் தாக்குதல் ஆகியவையும் இருக்காது. கம்பு மற்றும் தினை 70-ம் நாளில் கதிர் பிடித்து, 90 – ம் நாளில் முற்றி, அறுவடைக்குத் தயாராகி விடும். வரகு, சாமை, குதிரைவாலி ஆகியவை 80-ம் நாளில் கதிர் பிடித்து, 110 – ம் நாளில் முற்றி அறுவடைக்கு வந்துவிடும்.

**ஏக்கருக்கு 1,000 கிலோ கம்பு!**

கதிர்களை அறுவடை செய்து, களத்தில் காய வைத்து, டிராக்டர் மூலம் கதிரடித்தல்... தூசும், மணியமாக பிரிந்துவிடும். அதை சுத்தப்படுத்தி விற்பனை செய்யலாம். வரகு, கம்பு... ஏக்கருக்கு

1,000 கிலோ, சாமை, தினை, குதிரைவாலி.. ஏக்கருக்கு 700 கிலோ என்று மகசூல் கிடைக்கம். கம்பு ஒரு கிலோ 28 -30 ரூபாய். வரகு ஒரு கிலோ 20 ரூபாய், சாமை ஒரு கிலோ 25 ரூபாய், குதிரைவாலி ஒரு கிலோ 25 ரூபாய் விலையில் விற்பனை ஆகும். எந்தப் பயிரை சாகுபடி செய்தாலும்.. ஏக்கருக்கு சராசரியாக 7 ஆயிரம் ரூபாய் செலவாகும். எப்படியும் 10 ஆயிரம் ரூபாயிலிருந்து 15 ஆயிரம் ரூபாய் வரைக்கும் லாபம் கிடைத்துவிடும் என்றார்.

**தொடர்புக்கு**
**ரவிச்சந்திரன், செல்போன் : 94432 – 36983**
**சிறுதானியங்கள் துறை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்**
**கோயம்புத்தூர் தொலைபேசி : 0422 – 2450507.**